RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2123

OPEN ACCESS

# கல்வெட்டுக்களின் தன்மையும் அசோகரது கல்வெட்டுக்களும்

ப. தமிழ்ச்செல்வி [அ, *]

[அ] வரலாற்றுத்துறை, கந்தசாமிக்கண்டர் கல்லூரி, வேலூர், நாமக்கல்-638182, தமிழ்நாடு, இந்தியா.

# Inscriptions of Ashokar

**P. Thamizhchelvi** [a, *]

[a] Department of History, Kandaswami Kandar's College, Paramathi Velur, Namakkal-638182, Tamil Nadu, India

* Corresponding Author: selviananthabarna@gmail.com

Received: 13-08-2022
Revised: 27-09-2022
Accepted: 06-10-2022
Published: 15-11-2022

**ABSTRACT**

Inscriptions have been an instrument in reconstructing the political history of ancient India. In ancient times all the messages that were considered to be valuable were engraved on stones, rocks, iron pillars, caves, bronze, copper plates and terracotta seals. The messages thus inscribed are called inscriptions. Often the decrees of the kings were inscribed as inscriptions. Apart from these, there are inscriptions related to soldiers, lords, officers and other important events, and the inscriptions can last for thousands of years. Hence the most ancient historical accounts are reliable evidence for many events. Many inscriptions are inscribed not only in one language but also in more than one language indicating the same message. The changes in the written forms of a language are explained only through the inscriptions, so the information obtained through the inscriptions is a kind of true knowledge of the historical truth of a country. Ashoka was the first to publish a large number of inscriptions. Almost the entire history of his reign has been constructed from the evidence provided by inscriptions. Through the inscriptions we can get a clear idea about the names of the kings, the titles of the kings, the chronology of the royal dynasties, the conquests of the king, the area of the state, the political, social, economic and religious status. This research paper sheds light on the inscriptions and in particular about Ashokar's inscriptions.

**Keywords:** Ashokar Inscriptions, King, Ancient, Language

## முன்னுரை

இந்திய வரலாற்றை உருவாக்கம் செய்ய கல்வெட்டு மிகச்சிறந்த முதன்மைச் சான்றாக விளங்குகின்றது. பண்டைய இந்தியாவின் அரசியல் வரலாற்றின் மறு கட்டமைப்பிற்கு கல்வெட்டுக்கள் முக்கிய காரணமாக இருந்திருக்கின்றன. பண்டைய காலத்தில் நீண்ட காலம் அழியாதிருக்க வேண்டும் என கருதப்பட்ட செய்திகள் அனைத்தும் கற்கள், பாறைகள், இரும்புத் தூண்கள், குகைகள், வெண்கலம், செப்புத்தகடுகள், டெரகோட்டா முத்திரைகள் ஆகியவற்றில் பொறித்து வைக்கப்பட்டன. இவ்வாறு பொறிக்கப்பட்ட செய்திகள் கல்வெட்டுக்கள் என்று அழைக்கப்படுகிறது. கல்வெட்டுக்கள் பல ஆயிரம் ஆண்டுகள் நிலைத்திருக்கக் கூடியவை ஆதலால் மிகப் பழங்கால வரலாற்றுச் செய்திகள் நிகழ்வுகளுக்கான நம்பகமான சான்றுகளாக இருக்கின்றன. இந்தியத் துணைக்கண்டத்தில் முதன் முதலாக கிடைத்த கல்வெட்டுக்கள், கிமு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய சிந்து வெளியில் கிடைத்த கல்வெட்டுக் குறிப்புகள் ஆகும். ஆனால் இக்கல்வெட்டுக் குறிப்புகள் இதுவரை யாராலும் முழுமையாகப் படித்து அறியப்படவில்லை. வட இந்தியாவில், கிமு மூன்றாம் நூற்றாண்டில் பிராமி எழுத்தில் பிராகிருத மொழியில் எழுதப்பட்ட அசோகரின் கல்வெட்டுகளும், தமிழ்நாட்டில் தமிழி எழுத்தில் எழுதப்பட்ட மாங்குளம் கல்வெட்டுகள் முதலில் அறியப்பட்டதாகும். அசோகர் காலத்திற்கு

முந்தைய கல்வெட்டுகள் இலங்கையின் அனுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது இந்தியத் தொல்லியல் ஆய்வகம் கண்டெடுத்த ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட கல்வெட்டுகளில், 60,000 கல்வெட்டுக்கள் தமிழ் மொழி கல்வெட்டுகளாகும் பெரும்பாலும் மன்னர்களின் ஆணைகள் அவர்கள் செய்த கொடைகள், பணிகள் போன்றவை கல்வெட்டுக்களாகப் பொறித்துவைக்கப்பட்டன.இவை தவிர வீரர்கள் பிரபுக்கள் அதிகாரிகள் போன்றோர் தொடர்பிலும் முக்கிய நிகழ்வுகள் தொடர்பிலும் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. பல கல்வெட்டுக்கள் ஒரு மொழியில் மட்டுமின்றி ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளிலும் ஒரே செய்தியை குறிக்கும்படி அமைந்துள்ளன. இத்தகைய கல்வெட்டுகள் வழக்கொழிந்து மறக்கப்பட்டு விட்ட மொழிகள் பலவற்றை வாசித்து அறியவும் அவற்றை மீண்டும் மீட்டுக் கொண்டு வரவும் உதவுகின்றன. பல்வேறு காலகட்டங்களைச் சேர்ந்த கல்வெட்டுகளை ஆய்வு செய்வதன் மூலம் எழுத்துக்களின் படிமுறை வளர்ச்சியை நாம் அறிந்துக் கொள்ள முடிகிறது (Dharmaraj, 2010).

காலந்தோறும் ஒரு மொழியின் எழுத்து வடிவங்களில் ஏற்பட்ட மாற்றங்களை கல்வெட்டுகளின் மூலமாக மட்டுமே சிறப்பாக எடுத்துரைக்க முடியும் எனவே கல்வெட்டுக்கள் மூலம் பெறப்படும் செய்திகள் ஒரு நாட்டின் வரலாற்று உண்மையை உண்மையாக அறிந்துகொள்ள வகை செய்கின்றன. அதிக எண்ணிக்கையிலான கல்வெட்டுக்களை முதலில் வெளியிட்டவர் அசோகர் ஆவார் ஏறக்குறைய அவரது ஆட்சியின் முழு வரலாறும் கல்வெட்டுகளால் வழங்கப்பட்ட சான்றுகளில் இருந்து உருவாக்கப்பட்டுள்ளது. கல்வெட்டுக்களின் மூலம் அரசரது பெயர்கள், அரசரது பட்டங்கள், அரச வம்சங்களின் காலவரிசை, அரசரின் வெற்றிகள், அரசின் பரப்பளவு, அரசியல் சமூக பொருளாதார மற்றும் சமய நிலை போன்றவற்றைப் பற்றி நாம் தெளிவாக உணர முடிகிறது (Dharmaraj, 2010).

## கல்வெட்டுக்களின் தன்மையும் வளர்ச்சியும்

பண்டைக் காலத்தில் நீண்ட காலம் அழியாதிருக்க வேண்டும் எனக் கருதப்பட்ட செய்திகள் கற்களில் வெட்டப்பட்டன. இவ்வாறு கல்லில் பொறிக்கப்பட்ட செய்தியே கல்வெட்டு எனப்படுகின்றது. தொல்காப்பியத்தில், போர்க்களத்திலே வீரச்சாவு அடைந்தோருக்குக் கல்லெடுத்தலும், அக்கல்லில் அவர்தம் வீரச் செயல்களைப் பொறித்தலும் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.இவ்வாறாக நடுகற்களில் தோன்றிய கல்வெட்டுக்கள் பல்லவர் காலத்தில் வேறு தேவைகளுக்கும் பயன்படத் தக்கதாக வளர்ச்சியடைந்தன. பல்லவர்களின் தொடக்க காலக் கல்வெட்டுக்கள் பிராகிருத மொழியிலும், இடைக்காலத்தில் சமஸ்கிருதத்திலும் கி.பி ஆறாம் நூற்றாண்டு முதல், பிற்காலப் பல்லவர் காலத்தில் தமிழிலும் பொறிக்கப்பட்டன.இவர்களுக்குப் பின்னர் சோழ மன்னரும், பாண்டியரும் கல்வெட்டுக்களைப் பொறிக்கும் வழக்கம் உடையோராக இருந்தனர். இதனால் கல்வெட்டுக்கள் பெரிதும் வளர்ச்சியுற்றன. இவ்வாறு பொறிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான கல்வெட்டுக்களின் மூலமே தமிழ் நாட்டின் இடைக்கால வரலாற்றின் பெரும்பகுதியை அறிந்து கொள்ள முடிந்தது (Dharmaraj, 2010).

இந்தியாவில் கிடைத்த ஆயிரக்கணக்கான கல்வெட்டுக்களில் பெரும்பான்மையானவை சமய சார்புடையதாகவும் மன்னனின் புகழ் பாடக் கூடியதாகவும் இருந்த போதிலும் இவற்றின் மூலம் வருகின்ற சமூக வரலாற்று செய்திகளை வைத்துக்கொண்டு கல்வெட்டின் காலம் தன்மை மற்றும் வரலாறு போன்றவற்றை கல்வெட்டியல் ஆய்வாளர் கணித்துள்ளனர். மன்னனின் புகழ்ப் பாடக் கூடியவையாக இருப்பினும் அவற்றை மற்றவைகளுடன் ஒப்பிட்டு வரலாற்றை எழுத இயலும். மேலும் கல்வெட்டின் பிறபகுதி அக்கால சமூக அமைப்பை ஓரளவு வெளிப்படுத்தக் கூடிய வகையில் அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு காலகட்டத்திலும் கல்வெட்டுகள் பொதுவாக ஒரு மையக் கருத்தை வெளிப்படுத்தக் கூடியதாக அமைந்திருக்கின்றது. வேதங்கள் இதிகாசங்கள் புராணங்கள் இலக்கியங்கள் சமய நூல்கள் நாணயங்கள் தொல்லியல் சான்றுகள் போன்றவை இவற்றில் பெரும் பங்காற்றிய போதிலும் கல்வெட்டுத் தரவுகளை இலக்கியங்களின் காலத்தை முடிவு செய்ய பெரிதும் பயன்படுகின்றன. இந்தியாவில் கிடைத்த கல்வெட்டுகள் பெரும்பான்மையானவை கொடைக் கல்வெட்டுகளாக கோயில்களில் காணப்பட்ட போதிலும் இக்கல்வெட்டுகளில் ஊடாகக் கிடைக்கின்ற வரலாற்றுச் செய்திகளை நாம் ஒதுக்கிவிட முடியாது பொதுவாக இலக்கியங்கள் காலம்தோறும்

பெயர்த்து எழுத படுவதாலும் இடம் விட்டு இடம் நகரக் கூடிய தன்மை பெற்றிருப்பதாலும் சமூக மேல்தட்டு மொழியைக் கொண்டு விளங்குவதாலும் சில நேரங்களில் இலக்கியங்களை விட சமகால வரலாற்று செய்திகளைத் தாங்கி நிற்கின்ற கல்வெட்டுக்கள் ஒரு சிறந்த வரலாற்று சான்றுகளாகத் திகழ்கின்றன. கல்வெட்டுகள் நிலையானவை ஆகவும் இடம் மாறாததாகவும் சாதாரண மக்கள் பேசுகின்ற மொழியில் அமைந்த வழியாகவும் இருப்பதால் இதன் வரலாற்று முக்கியத்துவம் மேலும் கூடுகின்றது. கல்வெட்டுகள் யாரால் எதற்கு என்ன நோக்கத்திற்காக குறிக்கப்பட்டன என்பதை மனதில் நிறுத்தி புள்ளியியல் தர்க்க ரீதியிலான அடிப்படையில் அதில் காணும் வரலாற்று நிகழ்வுகளை கல்வெட்டு ஆய்வாளர் கையாண்டால் மட்டுமே இது ஒரு மிகச்சிறந்த வரலாற்றுச் சான்றாக பயன்படுத்திக் கொள்ள இயலும். சில நேரங்களில் இலக்கியங்களில் காணப் படாத செய்திகள் கல்வெட்டுக்கள் மூலம் தரப்படுவதை காணலாம். எடுத்துக்காட்டாக சங்க இலக்கியங்கள் சமண சமயத் தொடர்பான செய்திகளைப் பெரும்பாலும் தாங்கி நிற்க வில்லை என சொல்லலாம். ஆனால் கிமு நான்காம் நூற்றாண்டிலேயே தமிழகத்தில் சமணம் தழைத்தோங்கி இருந்தது என்பதை கணிசமான தமிழ்-பிராமி கல்வெட்டுகள் நமக்கு உணர்த்துகின்றன அதேபோல் செங்கம் பகுதியில் கிடைத்த நடுகற்கள் அங்கு நிலவிய சமூக சூழலை நமக்கு எடுத்துக் கூறுகின்றது. இவற்றுக்கு எல்லாம் மேலாக காலந்தோறும் ஒரு மொழியின் எழுத்து வடிவங்களில் ஏற்பட்ட மாற்றத்தைக் கல்வெட்டு மூலம் மட்டுமே திறம்பட எடுத்துரைக்க முடியும். எனவே கல்வெட்டுகள் மூலம் பெறப்படும் பல்வேறு தரவுகள் ஒரு நாட்டின் வரலாற்றுத் தொன்மையை நிரல்பட உய்த்துணர வகை செய்கின்றன (Hultzsch, 1925).

ஒவ்வொரு ஆண்டிலும் நடைபெற்ற வரலாற்று நிகழ்வுகளை எடுத்துக் கூறுகின்ற கலிங்க மன்னன் காரவேலனின் ஹதிகும்பா கல்வெட்டு பிற்காலத்தில் கிடைக்கவில்லை. அசோகர் காலம் தொட்டு தற்காலம் வரை கிடைக்கின்ற கல்வெட்டுகள் பெரும்பாலும் அரசனின் புகழ் பாடாமல் சமூக நிகழ்வுகளைத் தெரியப்படுத்தக் கூடியதாக இருக்கின்றன. குப்தர் காலம் தொட்டு கிடைக்கின்ற பெரும்பான்மையான கல்வெட்டுக்களில் மன்னன் கொடை அளித்த காலத்து அல்லது வெற்றிகொண்ட நிகழ்வினைக் குறிக்கின்ற வகையில் நடைபெறுகின்ற விழாவின் பொழுது அல்லது கோவில் கட்டுதல் போன்ற இறைபணி செய்து வருகின்ற பொழுது அம் மன்னனின் புகழ் பாடுகின்ற கல்வெட்டு களாகவே இருக்கின்றன. எடுத்துக்காட்டாக சமுத்திர குப்தரின் வெற்றியை பறை சாற்ற கூடியதாக அவனது அலகாபாத் தூண் கல்வெட்டு அமைகின்றது. இதே போன்ற தன்மை கொண்ட கல்வெட்டு யசோதவர்மனின் மாண்டசோர் தூண் கல்வெட்டு ஆகும். சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியின் ஐகேள் கல்வெட்டு அம்மன்னன் சமணகோயில் எழுப்பியதை பற்றி கூறுகின்றது. மேலை சத்ரப மன்னன் ருத்ர தமனின் ஜூனாகாத் கல்வெட்டு கல்வெட்டு, கர்நாடக மாநிலத்தில் கிடைத்த சாந்தி வர்மனின் தாள குண்டா கல்வெட்டுகள் நீர்ப்பாசன பணிகள் மேற்கொண்டவை பற்றி கூறுகின்றன. மன்னனின் புகழ் பாடும் சிறப்பு வாய்ந்த கல்வெட்டுகள் பெரும்பாலும் அந்த மன்னனின் அரசவை கவிகளால் தொகுக்கப்பட்டதாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக சமுத்திர குப்தரின் அரசவை கவியான ஹரிசேனர் இயற்றிய அலகாபாத் தூண் கல்வெட்டு இரண்டாம் புலிகேசியின் அரசவை கவிஞர் ரவி கீர்த்தி இயற்றிய ஐகேள் கல்வெட்டுகளைக் கூறலாம் (Hultzsch, 1925).

## கல்வெட்டுகளின் முக்கியத்துவம்

- கல்வெட்டுகளிலிருந்து அரசர்களின் பெயர்கள் மற்றும் பட்டங்கள் பற்றி அறிந்து கொள்கிறோம். மௌரியர்கள் மற்றும் குப்தர்கள் போன்ற சில வம்சங்களின் காலவரிசை வரலாற்றை அறிந்து கொள்கிறோம்.
- கல்வெட்டுகளும் மன்னர்களின் சாதனைகளையும் வெற்றிகளையும் கூறுகின்றன. சமுத்திர குப்தர் வட இந்தியாவில் ஒன்பது மன்னர்களையும், தென்னிந்தியாவில் 12 மன்னர்களையும் தோற்கடித்ததாக அலகாபாத் தூண் கல்வெட்டு மூலம் நாம் அறிந்து கொள்கிறோம். குப்தர்கள் காலம் பொற்காலம் மற்றும் இந்திய நெப்போலியன் சமுத்திரகுப்தர் என்ற மாபெரும் வீரனின் பெயர் புகழ் போன்றவற்றை நமது மறதியில் இருந்து அலகாபாத் தூண் கல்வெட்டு பாதுகாத்து வருகிறது.

- கல்வெட்டுகள் பேரரசின் பரப்பளவைத் தீர்மானிக்க உதவுகின்றன, அசோகரின் பரப்பளவு முக்கியமாக அவரது கல்வெட்டுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது.
- கல்வெட்டுகள் ஆரம்பகால இந்தியாவின் வரலாற்று புவியியலை மறுகட்டமைக்க உதவுகின்றன. புத்தர் லும்பினியில் பிறந்தார் என்பது அசோகரின் ரூமிண்டி தூண் கல்வெட்டு மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.
- பல்வேறு காலகட்டங்களில் இந்தியாவின் அரசியல் சமூகப் பொருளாதார மற்றும் மதம் பற்றி அறிந்து கொள்கிறோம்
- பெண்ணும் நிர்வாகத்தில் பங்கெடுத்தாள் என்பது கல்வெட்டுகளில் இருந்து அறியப்படுகிறது. (சந்திரகுப்தரின் மகள் பிரபாவதி தனது மகன்கள் மைனர்களாக இருந்தபோது நிர்வாகத்தை மேற்கொண்டார்.)
- அரசர்கள் மற்றும் மக்களின் சமூக வாழ்க்கைப் பற்றிய விவரங்களையும் வர்ணாசிரம தர்மத்தைப் பேணுவது அரசனின் கடமை பற்றியும் அறிந்து கொள்கிறோம்.
- விவசாய பாசனம் மற்றும் மக்களின் பொருளாதார நிலைமைகள் பற்றிய கூடுதல் விவரங்களைப் பெறுகிறோம். ருத்ர தாமனின் ஜுனாகத் கல்வெட்டு சுதர்சன ஏரியின் புனரமைப்பு பற்றிய மிக அழகான பதிவை வழங்குகிறது.
- விலை, எல்லைகள் மற்றும் நிலத்தின் அளவீடு ஆகியவற்றைப் பதிவு செய்யும் விவரங்களும் கிடைக்கின்றன.
- கல்வெட்டுகள் சமய வரலாற்றைக் குறிப்பாக அசோகரின் தனிப்பட்ட மதத்தைப் பற்றிய விவரங்களை நமக்கு வழங்குகின்றன. பண்டைய இந்திய மன்னர்கள் பிற மதப் பிரிவுகளைப் பற்றி சகிப்புத்தன்மையுடன் இருந்தனர் என்பதையும் நாம் அறிந்து கொள்கிறோம்.

## அசோகர் கல்வெட்டுக்கள்

அசோகரின் கல்வெட்டுக்கள் அசோகரின் வரலாற்றைப் பற்றி நாம் அறிய உதவும் சான்றுகளாக இருக்கின்றது. அவை யாவும் அசோகரின் ஆணைகளே ஆகும். இந்த கல்வெட்டுகள் பேரரசின் பல இடங்களில் அமைக்கப்பட்டிருந்தன. அவை காணப்படும் இடங்களில் இருந்து அசோகரின் பேரரசின் பரப்பினை ஓரளவு நாம் அறிய முடிகிறது. இந்த கல்வெட்டுக்கள் பாலி, அராபிக், பிராமி, கரோஷ்டி மற்றும் பிராகிருத மொழிகளில் செதுக்கப்பட்டுள்ளன. கல்வெட்டுக்களில் காணப்படும் எழுத்து வடிவம் பிராமி ஆகும். ஒரு சில கல்வெட்டுக்களில் அசோகர் உடைய பெயர்கள் காணப்படுகின்றன அசோகரின் கல்வெட்டுக்கள் மண் மூடிப் போன பிராதான இடங்களிலும் காடுகளிலும் புதர்களிலும் மறைந்து கிடந்ததால் இவற்றை வேட்டைக்காரர்களும் வனத்துறையினரும் ஆராய்ச்சியாளர்களும் மட்டுமே கண்டுபிடித்துள்ளனர். முதன் முதலில் 1750 இல் தைப்பெந்தாலர் என்பவர் தில்லி, மீரட் கல்வெட்டை கண்டுபிடித்தார். கிபி 1879 இல் தளபதி கன்னிங்காம் என்பவர் அசோகரின் கல்வெட்டுகளைத் தொகுத்து இந்திய சாசனங்களின் முதல் தொகுப்பை வெளியிட்டார். 1925இல் ஹிதச் என்பவர் இதனை திருத்தியமைத்து வெளியிட்டார். இக்கல்வெட்டுகளில் சுமார் 5000 சொற்கள் உள்ளன. இந்த கல்வெட்டுகள் வி. எ ஸ்மித், டி ஆர். பண்டார்கர், ஆர். கே முகர்ஜி, ரோமிலா தாபர் போன்ற வரலாற்று அறிஞர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அசோகரின் கல்வெட்டுகள் இந்திய வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பிடித்தவையாகும். அசோகரின் கல்வெட்டுகளை செதுக்கப்பட்ட கால வரன்முறை, அவை குறிப்பிடும் செய்திகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம் (Nilakanta Sastri, 2002). சிறிய கற்பாறை ஆணைகள், கற்பாறை ஆணைகள், கற்றூண் ஆணைகள், சிறிய கற்றூண் ஆணைகள், சாஞ்சி ஸ்தூபி.

## சிறிய கற்பாறை கல்வெட்டுக்கள் (ஆணைகள்)

சிறிய கற்பாறை கல்வெட்டுக்கள் (கி.மு.269-233) அசோகர் கல்வெட்டுக்களின் ஆணைகளின் துவக்கக் காலத்தவை ஆகும். இவை அசோகரின் பெரும் பாறைக் கல்வெட்டுக்களுக்கு முந்தையவை. இது அசோகரின் அறியப்பட்ட முதல் கல்வெட்டு ஆகும். கிரேக்க அல்லது அரமேய மொழியில் உள்ள

அசோகரின் கல்வெட்டுகள் சில சமயங்களில் "சிறு பாறைக் கல்வெட்டுகள்" என்றும் வகைப்படுத்தப்படுகின்றன.இந்த சிறிய பாறைக் கல்வெட்டுகள், அசோகரின் ஆட்சியின் 10 ஆம் ஆட்சி ஆண்டில் செதுக்கபட்ட முதல் கல்வெட்டைப் பின்பற்றி செதுக்கபட்டுள்ளன. அசோகர் கல்வெட்டுகள் இந்திய மொழிகளில் உள்ளன, அசோகரின் காந்தாரக் கிரேக்க கல்வெட்டுகள் சுண்ணாம்புக் கல் மீது பொறிக்கப்பட்டுள்ளன. பின்னர், அவரது ஆட்சியின் 26 மற்றும் 27 ஆம் ஆண்டுகளில், அசோகர் புதிய கல்வெட்டுகளைப் பொறித்தார். அவை கம்பீரமாக நெடுவரிசைகளில், அசோகரின் தூண்களில் பொறிக்கப்பட்டன. சிறு பாறைக் கல்வெட்டுளில், அசோகர் தன்னை ஒரு "சாதாரண சீடர்" அல்லது “புத்தரின் சீடர்” என்று காட்டுவதன் மூலம் தனது சமயத் தொடர்பைப் பற்றி வெளிப்படையாகக் குறிப்பிடுகிறார்.குஜாரா சிறு பாறைக் கல்வெட்டுக்களிலும், அசோகரின் பெயர் அவரது பட்டங்களுடன் “தேவானம்பிய பியாதாசி அசோகராஜா” என்று குறிப்பிடப்பட்டுள்ளது (Ramaiyar, 1925). அசோகர் இந்திய துணைக்கண்டம் முழுவதும் 20 சிறு பாறைக் கல்வெட்டுக்கள் நிறுவியுள்ளார். அவைகள்: “புல்-இ-தருந்தே அராமேயக் கல்வெட்டு - ஆப்கானித்தான், தட்சசீலம்- பாகிஸ்தான், பைரத் - இராஜஸ்தான், அக்ரௌரா - உத்தரப் பிரதேசம், சாசாராம் - பிகார், சரு மரு - மத்தியப் பிரதேசம், பராபர் - பிகார், மஸ்கி - கர்நாடகா, பிரம்மகிரி - கர்நாடகா, பல்லக்கிண்டு - கர்நாடகா, கவிமடம் - கர்நாடகா, பாப்ரு, ஜதிங்கா, நித்தூர், ரூப்நாத், சித்தாப்பூர், உதயகோலம், ரஜுலா மந்தகிரி, குஜ்ஜரா, பகாப்பூர், தில்லி.

## கற்பாறை ஆணைகள்

கற்பாறை கல்வெட்டுக்கள் மொத்தம் 14 கிமு 257க்கும் 256க்கும் இடையே உள்ள காலத்தில் இவை செதுக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த கல்வெட்டுகள் யாவும் எல்லைப்புற மான்சோராவிலும், பெஸாவருக்கு அருகில் உள்ள சபாஸ்கரிலும் மற்றும் சித்த புரம், பிரம்மகிரி, மாஸ்கி, சகஸ்ரம், ரூபிநாத், பைராத், இர்நார், நெல்லி, கால்சி, சோப்ரா கால்சி, சோப்ரா ஆகிய 12 இடங்களில் இந்த கல்வெட்டுகள் காணப்படுகின்றன. ஜவு டா, எர்ரகுடி ஆகிய இடங்களில் உள்ள கல்வெட்டுகளில் கரோஷ்டி எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளன. இவை இடமிருந்து வலமாக உள்ளன 12 கல்வெட்டுகளும் பிராமி எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. இவைகள் அசோகரின் ஆட்சி முறை நீதி அறம் முதலியவற்றைப் பற்றி தெரிவிக்கின்றன (Sirajudeen, 2010).

- முதலாவது கற்பாறை கல்வெட்டு அசோகர் மக்கள் நலத்தில் விலங்குகள் நலத்தில் காண்பித்த அன்பை எடுத்துக் காட்டுகிறது.
- இரண்டாவது பாறை கல்வெட்டு மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் ஏற்படும் நோயை நீக்குவதற்கு மூலிகைகளைப் பயிரிட்டு சாலைகளில் நிழல் தரும் மரங்களை நட்டு கிணறுகளை வெட்டி வைத்து உயிர்கள் இன்புற்று இருக்க நாம் செய்வதைக் கூறுகின்றார்.
- மூன்றாவது கல்வெட்டில் அரசாங்க நிர்வாக அதிகாரிகள் நிர்வாகக் காரணத்திற்காக நல்வழி கோட்பாடுகளை பரப்பும் பொருட்டு ஐந்து ஆண்டிற்கு ஒரு முறை இடமாற்றம் செய்யப்பட்டது பற்றி கூறுகின்றது.
- நான்காவது கல்வெட்டு அரசரின் அகிம்சை கொள்கையை விளக்குகின்றது.
- ஐந்தாவது கல்வெட்டு தர்ம மகா மாத்திரர்களின் பணிகளைக் கூறுகின்றது.
- ஆறாவது கல்வெட்டு அசோகர் மக்கள் நன்மைக்காக அதிகாரிகளுக்கு அனுப்பிய கட்டளைகளைக் கூறுகின்றது.
- ஏழாவது கல்வெட்டு அசோகரின் புலனடக்கம், மனத்தூய்மை, நன்றி, தர்மத்தின் நிலையான ஈடுபாடு போன்றவற்றை வரற்புறுத்திக் கூறுகிறது.
- எட்டாவது கற்பாறை கல்வெட்டு புத்த கயா போன்ற புண்ணிய தலங்களுக்கு செல்வதன் சிறப்பைப் பற்றிக் கூறுகிறது.

- ஒன்பதாவது கல்வெட்டு பிறப்பு திருமணம் போன்றவற்றில் நிகழ்த்தும் சடங்குகளைத் தேவைவற்றது கூறுகிறது.
- 10 வதுகல்வெட்டு 11வது கல்வெட்டு அசோகர் கூறும் தர்மத்தை கடைப்பிடிப்பதே உண்மையான புகழும் அறமும் என்று சொல்கிறது.
- 12வது கல்வெட்டு அசோகர் உடைய சமயப்பொறை, பரந்த உள்ளத்தைக் காட்டுகிறது.
- 13, வது கல்வெட்டு அசோகர் கலிங்கப் போரில் வருந்தத்தக்க நிகழ்ச்சிகளையும் தர்மத்தின் வெற்றி தலையாயது என்று கூறுகிறது. 14 வது கல்வெட்டு உண்மை வழியை மக்கள் கடைபிடித்து நல்வாழ்வு வாழ்வதற்காக என்னென்ன ஆணைகள் உள்ளதோ அதைப் பற்றிக் கூறுகின்றது.

## கற்றூண்ஆணைகள்

அசோகரின் தூண்கள் பல்வேறு வகைப்படும் ஒரே கல்லினால் செதுக்கப்பட்ட அவைகளின் உயரம் நாற்பதில் இருந்து ஐம்பது அடியாகும் அசோகர் காலத்தில் நிறுவப்பட்ட கற் றூண்கள் அனைத்தும் ஒரே வெண்ணிற கல்லில் உருவாக்கப்பட்டு சிற்பியின் கைவண்ணத்தால் பளபளப்பாக்க ப்பட்டு காண்பதற்கு உலோகத்தால் ஆனது போல் தோற்றமளிக்கின்றன. மொத்தம் ஏழு கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. அவை அம்பாலாவிலுள்ள தோப்பூரா, மீரட் அலகாபாத், சாரநாத், சாஞ்சி, கொள சாம்பி, ஆகிய இடங்களில் எடுக்கப்பட்டுள்ளன. முதல் மூன்று கற்றூண் ஆணைகளில் தர்மத்தைப் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. நான்காவது மற்றும்ஐந்தாவது ஆணை கவர்னர்கள் எவ்வாறு ஆட்சி புரிய வேண்டும் என்று கூறுகிறது. ஐந்தாவது கல்வெட்டில் அசோகர் அகிம்சையின் வளர்ச்சிக்காக தாம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை விளக்குகின்றார். ஆறாவது கற்றூண் ஆணை12-வது பாறைக் கல்வெட்டில் கருத்தை வலியுறுத்துகிறது. அசோகரின் கல்வெட்டுகளில் மிகவும் நீண்டதும் முக்கியமானதும் ஆனது ஏழாவது கற்றூண் ஆணையே ஆகும். இதை அசோகரின் மறைநூல் என்று கூறலாம். ஆட்சியின் பெரும்பகுதியில் தாம் போதித்து வந்த தர்மத்தின் வளர்ச்சிக்காக தான் செய்த பணிகளை தொகுத்துரைக்கிறார் (Ramaiyar, 1925).

## சிறிய கற்றூண் ஆணைகள்

அசோகரின் கல்தூண்கள் அனைத்திலும் மிக அழகு மிக்கதும், சிறப்பானதாகவும் உள்ளது சாரநாத்தில் உள்ள கல் தூண் ஆகும். பளபளப்பான இந்தத் தூணின் உச்சியில் தாமரை போன்ற பீடத்தின் மேல் மட்டத்தில் நான்கு திசைகளை நோக்கியபடி நான்கு சிங்கங்கள் உள்ளன. இந்த சிங்கங்களின் சிலைக்கு ஒப்பான அழகுமிக்க விலங்கின் சிலை உலகில் எந்த பண்டைக்கால கலைகளிலும் காணமுடியவில்லை என்று வின்சென்ட் ஸ்மித் கூறுகிறார். இத்தனை அழகு வாய்ந்த படிமங்கள் இன்றும் உருவாக்கப் படவில்லை என்றும் பண்டைய கலைப் பொருட்களாலும் இவற்றின் அழகை மிஞ்ச முடியாது என்று மார்சல் கூறுகின்றார் இவ்வாறு அசோகரின் கலைகள் வெளிநாடுகளில் இருந்து வேறுபட்டதாகும் அவற்றை மிஞ்சியது ஆகவும் காணப்படுகிறது (Ramaiyar, 1925).

## சாஞ்சி ஸ்தூபி

புத்தரின் உருவச் சிலையை வணங்கும் முறையைப் பயன்படுத்துவதற்கு முன்பு ஸ்தூபிகளுக்கு சென்று பக்தர்கள் வழிபட்டனர். அரைக்கோள வடிவில் செங்கல் அல்லது கற்களைக் கொண்டு கட்டப்பட்ட நிற்கும் வடிவங்களே ஸ்தூபி கள் ஆகும். இந்த ஸ்தூபிகள் அனைத்தும் புத்த சமயத்தினர் களுக்கு கோவில் களாகவே தென்பட்டன. மத்திய பிரதேசத்தில் போபால் நகருக்கு அருகிலிருக்கும் சாஞ்சி என்ற இடத்தில் ஸ்தூபி ஒன்றினை தவிர ஏனைய ஸ்தூபிகள் அனைத்தும் படையெடுப்புகளால் அழிந்துவிட்டன. அசோகர் காலத்தில் உருவாக்கப்பட்ட சாஞ்சி ஸ்தூபி மட்டும் அழியாமல் கிடைத்து இருப்பது வியப்பிற்குரியது. இதன் நான்கு நுழைவாயில்கள் பண்டைக்கால சிற்பக்கலையின் கவின்மிகு எடுத்துக்காட்டுகளாக திகழ்கின்றன. புத்தரின் வாழ்க்கையை விளக்கும் சிற்பங்களும் ஜாதகக்

கதைகளும் நுழைவாயில்களில் சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளன. மிக நுண்ணிய சிற்ப வேலைப்பாடுகள் சாஞ்சி ஸ்தூபி யில் காணப்படுகிறது.

புத்தர் இறந்த பிறகு தனது எச்சங்களைப் புதைத்து அவற்றின்மீது மடாலயங்களையும் ஸ்தூபிகளையும்எழுப்ப வேண்டும் என்று தனது சீடர்களிடம் கூறியதாக புத்த சமய நூலான மகா பரிநிப்பனசுத்தா என்ற நூல் கூறுகின்றது. எனவேதான் கலிங்கப் போருக்குப் பிறகு புத்த மதத்தைத் தழுவிய அசோகர் நாடு முழுவதிலும் சுமார் 84 ஆயிரம் ஸ்தூபிகளை எழுப்பினார். ஸ்தூபிகள் அரைக்கோள வடிவில் செங்கற்கள் அல்லது கற்களைக் கொண்டு கட்டப்படும் நிற்கும் வடிவங்களே ஆகும். இது ஒன்று அல்லது பல வாயில்களைக் கொண்டிருக்கும். கிபி ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த பாஹியான் தட்சசீலம், ஸ்ரீநகர், கபிலவஸ்து, பனாரஸ், பிரயாகை, ஆகிய இடங்களில் 30 மீட்டர் உயரமான ஸ்தூபிகளைப் பார்த்ததாக கூறியுள்ளார். அசோகர் காலத்தில் உருவாக்கப்பட்ட ஸ்தூபிகளில் மத்தியபிரதேசம் போபாலுக்கு அருகில் உள்ள சாஞ்சி ஸ்தூபி மட்டும் அழியாமல் இருப்பது வியப்பிற்குரியது. இது 3.5 மீட்டர் உயரமும் 36.50 மீட்டர் சுற்றளவு உடையது. இதனைச் சுற்றி 2.30 மீட்டர் உயரத்தில் கல்லினால் சுற்றி வேலி போடப்பட்டு உள்ளது. நான்கு நுழைவாயில்கள் பண்டைக் கால சிற்பக் கலையின் கவின்மிகு எடுத்துக்காட்டுகளாக திகழ்கின்றன. புத்தரின் வாழ்க்கையை விளக்கும் சிற்பங்களும் ஜாதகக் கதைகளும் நுழைவு வாயில்களில் சிற்பங்களாக உருமாறி உள்ளன. மிக நுண்ணிய சிற்ப வேலைப்பாடுகள் சாஞ்சி ஸ்தூபியில் காணப்படுகின்றன (Ramaiyar, 1925).

## அசோகரின் பிற கல்வெட்டுக்கள்

நீக்லீவா கற்றூண் கல்வெட்டு, பராபர் குகைக்வெட்டு, ஏற்றக்குடி சிறியகற்பாறை ஆணைகள், இரண்டு தராயித்தூண் கல்வெட்டுகள் போன்றவை அசோகர் பற்றிய செய்திகளைத் தருகிறது. இந்த இரண்டு கல்வெட்டுக்களும் நேபாளத்தில் உள்ள ருமிண்டி தராய்க்காட்டிலுள்ள நிக்கிலிவா என்னும் இடத்தில் கிடைத்துள்ளன. இந்தக் கல்வெட்டுகளை கொண்டு புத்தர் பிறந்த இடத்திற்கும் அவருடைய வாழ்க்கையுடன் தொடர்புடைய இடங்களுக்கும் அசோகர் புனிதப் பயணம் மேற்கொண்டார் என்பதை அறியலாம். ருமிண்டி என்பது புத்தரின் பிறப்பிடமான லும்பினி தோட்டம் ஆகும். பாப்ரு ஆணை அசோகர் புத்த சமயத்தைச் சேர்ந்தவர். அதில் மிக்க ஈடுபாடு கொண்டவர் என்பதை ஐயமற காட்டுகின்றது. எனவே இது ஒரு முக்கியமான அசோகரின் கல்வெட்டு என்று கூறலாம். இது 1840ல் பைராத் என்ற இடத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்டதுஇந்த கல்வெட்டு தற்சமயம் கொல்கத்தா அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

## முடிவுரை

இந்த ஆய்வானது கல்வெட்டுக்கள் தோன்றியது முதல் அது எவ்வாறு வளர்ச்சி அடைந்துள்ளது என்பதைக் காட்டுவதோடு கல்வெட்டுகளின் முக்கியத்துவம் வந்ததாகும். இந்த ஆய்வு முடிவானது மாணவர்களுக்கு கல்வெட்டுக்கள் பற்றிய நல்லதொரு அறிவினைப் புகட்டும் என்பது உண்மை. நம்முடைய கடமைகள் என்ன அரசருடைய கடமைகள் என்ன என்பது தெளிவாக தெரியவருகிறது. மாணவர்களுக்கும் கல்வெட்டு ஆய்வு மேற்கொள்ள கூடியவர்களுக்கும் ஒரே ஒரு தகவல் என்னவென்றால் கல்வெட்டுக்களை எங்கு பார்த்தாலும் நாம் அதனை ஆய்வு செய்வது அவசியம். ஏனென்றால் கல்வெட்டுக்கள் என்பது ஒரு முதன்மை தரச்சான்று என்பதை யாராலும் மறுக்க முடியாது ஆகையால் கல்வெட்டுக்களை தமிழ் மாணவர்கள் மற்றும் வரலாற்று மாணவர்கள் அனைவரும் சிறந்த முறையில் ஆய்வு செய்தோம் ஆனால் மறைந்த நிறைய உண்மைகள் வெளிச்சத்திற்கு வரும்.

## References

Dharmaraj, (2010) India Varalaru, Tensy Pathippagam, Chennai, India.

Hultzsch, E. (1925) Asoka Inscriptions, New Century Book House, India.

Nilakanta Sastri, K.A. (2002). A History of South India, OUP, New Delhi, India.

Ramaiyar, (1925) Asokanin Sathanankal, Aththiyam, New Century Book House, Chennai, India.

Sirajudeen, (2010) India Varalaru, Vetri Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License